இயல் மூன்று

# வினா, விடை வகைகள்

பல்வேறு சூழல்களில் வினாக்கள் கேட்கிறோம்; விடைகள் கூறுகிறோம். மொழியின் வளர்ச்சி என்பது கேட்பதிலும் விடையளிப்பதிலும்கூட இருக்கிறது. அவற்றைப் பற்றி இங்குக் காண்போம்.

## வினாவகை

அறிவினா, அறியா வினா, ஐயவினா, கொளல் வினா, கொடை வினா, ஏவல் வினா என்று வினா ஆறு வகைப்படும்.

| | | |
|---|---|---|
| அறிவினா | தான் விடை அறிந்திருந்தும், அவ்விடை பிறருக்குத் தெரியுமா என்பதை அறியும் பொருட்டுக் கேட்பது. | மாணவரிடம், 'இந்தக் கவிதையின் பொருள் யாது?' என்று ஆசிரியர் கேட்பது. |
| அறியா வினா | தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்வதற்காகக் கேட்பது. | ஆசிரியரிடம், 'இந்தக் கவிதையின் பொருள் யாது?' என்று மாணவர் கேட்பது. |
| ஐய வினா | ஐயம் நீங்கித் தெளிவு பெறுவதற்காகக் கேட்கப்படுவது. | 'இச்செயலைச் செய்தது மங்கையா? மணிமேகலையா?' எனக் கேட்பது. |
| கொளல் வினா | தான் ஒரு பொருளை வாங்கிக் கொள்ளும் பொருட்டுக் கேட்பது. | 'ஜெயகாந்தன் சிறுகதைகள் இருக்கிறதா?' என்று நூலகரிடம் கேட்பது. |
| கொடை வினா | பிறருக்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவும் பொருட்டுக் கேட்பது. | 'என்னிடம் பாரதிதாசன் கவிதைகள் இரண்டு படிகள் உள்ளன. உன்னிடம் பாரதிதாசன் கவிதைகள் இருக்கிறதா?' என்று கொடுப்பதற்காகக் கேட்பது. |
| ஏவல் வினா | ஒரு செயலைச் செய்யுமாறு ஏவுதற் பொருட்டுக் கேட்பது. | "வீட்டில் தக்காளி இல்லை. நீ கடைக்குச் செல்கிறாயா? என்று அக்கா, தம்பியிடம் கேட்டு வேலையைச் சொல்லுதல். |

## விடைவகை

சுட்டு விடை, மறை விடை, நேர் விடை, ஏவல் விடை, வினா எதிர் வினாதல் விடை, உற்றது உரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை என்று விடை எட்டு வகைப்படும்.